**கொள்வனவு அறிவித்தல்**

**இலங்கை கடற்படை**

**2026 ஆம் ஆண்டின் ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2027 ஆம் ஆண்டின் டிசம்பர் மாதம் 31 திகதி வரை இலங்கை கடற்படைக்கு தேவையான கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்களை கொள்வனவு செய்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள் / இறக்குமதியாளர்கள்/ வழங்குனர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அலகு ஒப்பந்த விலைகளின் கீழ் கேள்வி கோருதல்**

1. இலங்கை கடற்படையின் திணைக்கள கொள்வனவு குழுத் தலைவரினால் இலங்கை கடற்படைக்கு **2026 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2027 டிசம்பர் மாதம் 31** திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்களை கொள்வனவு செய்தல் அலகு ஒப்பந்த விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் **2026 ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் 2027 டிசம்பர் மாதம் 31** வரையிலாகும்.

(அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த பொருட்கள் **ராகம, வெலிசரையில்** உள்ள **இலங்கை கடற்படை கப்பல் "மஹசென்** நிறுவனத்தில் இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்கவும்.

(ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான ரூபா **20,000.00** ஐ பணமாக பணிப்பாளர் (நிதி) இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தவும். விண்ணப்ப படிவங்கள் **2025 செப்டம்பர் மாதம் 01 திகதி முதல் 2025 ஒக்டோபர் மாதம் 08 ஆம்** திகதி வரை வாராந்த வேலை நாட்களில் காலை **1000 மணி தொடக்கம் 1400** மணிக்கு இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உறிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

(இ) **ஏலத்திற்கு முந்தைய கூட்டம் 2025 செப்டம்பர் மாதம் 19 ஆம் திகதி காலை 1000 மணிக்கு கொழும்பு 01 இல் உள்ள இலங்கை கடற்படை தலைமையகத்தில்** நடைபெறும்.

2. 2026-2027 ஆம் ஆண்டுகளுக்கான கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்களின் விவரங்கள் மற்றும் தோராயமான தேவை அளவுகள் விண்ணப்பத்துடன் வழங்கப்படுகின்றதுடன் மேற்கோள்களுக்கான அழைப்பின் முடிவு / டெண்டர்கள் திறப்பு **2025 ஒக்டோபர் மாதம் 09** ஆம் திகதி **1400** மணிக்கு மேற்கொள்ளப்படும்.

3. ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்).

i. கப்பல்கள், படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்களை சமமான திறன் கொண்ட அரசு / தனியார் நிறுவனங்களுக்கு வழங்குதல் தொடர்பான 02 வருட திருப்திகரமான செயல்திறன் அறிக்கைகள்.

ii. நிலையான மூலதன வசதிகள்.

iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை.

iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் அஞ்சல்).

v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்.

vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்.

vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்.

viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்த சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 03 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் தனது விலைகளை சமர்ப்பிக்கும் போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5. விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும் போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **"இலங்கை கடற்படை, கப்பல்கள் / படகுகள் மற்றும் கடற்படை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படும் நிறப்பூச்சுக்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்" எஸ்எல்என்/எல்ஓஜி/31/ஆர்சீ/2026** கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) விண்ணப்பங்கள் திறக்கும் திகதி/ நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களக் கொள்வனவுக் குழு,**
**இலங்கை கடற்படை,**
**இலங்கை கடற்படை தலைமையகம்,**
**த.பெ. எண் 593,**
**கொழும்பு 01**.

6. குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன் அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கொள்முதல் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8. தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9. கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி **பணிப்பாளர் நாயகம் விநியோகம் மற்றும் சேவைகள் இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு 01**. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்கு **பணிப்பாளர் நாயகம் (அலகு ஒப்பந்தம்) தொலைபேசி 011 7192326** மூலம் தொடர்பு கொள்ள முடியும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.navy.lk யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை,
கொழும்பு 01.